தமிழ் பயிற்சி மொழி

ந. வானமாமலை, எம்.ஏ., எல்.டி.

ACC-TNAL
01319
OFFICE OF
1962
326
7-63
1039
MADRAS RECORD OFFICE
MADRAS

முதற்பதிப்பு: நவம்பர்—1962

விலை 20 காசுகள்

113290

அச்சிட்டோர்:
ஜனசக்தி பிரஸ்
32, பிராட்வே
சென்னை-1.

முன்னுரை

தமிழகத்தில் தமிழே கல்வித் துறையில் சகல மட்டங்களி லும் பயிற்சி மொழியாக்கப்படவேண்டும் என்று ஒரு கிளர்ச்சி நடந்து வருகிறது. சென்னை அரசு குறிப்பாக கல்வி அமைச் சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்க மறுக்கிறார். ஆங்கிலமே பயிற்சி மொழி யாக நீடிக்கவேண்டும் என்ற கருத்துடன் செயல்படுகிறார்.

படித்தவர்களில் பலர் உண்மையிலேயே குழம்பி நிற்கின் றனர். தெரிந்தே குழப்படி செய்பவர்களும் இருக்கின்றனர்!

இந்நிலையில் பேராசிரியர் ந. வானமாமலை அவர்கள் அவர்கள் இவ்விஷயம் குறித்து தெளிந்த ஞானத்துடன் இப் பிரசுரத்தை எழுதியுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை எளிய முறையில் விளக்கியுள்ளார். குழப்படிக்காரர்கள் எழுப்பும் எல்லாக் கேள்விகளுக்கும் விடையளித்துள்ளார்.

தோழர் ந. வானமாமலை அவர்கள் நமது கட்சியின் நெல்லை மாவட்டத் தலைவர்களில் ஒருவர். அவர் எழுதியுள்ள இந்தப் பயனுள்ள பிரசுரத்தை வெளியிடுவதில் மா. க. செயற் குழு மகிழ்ச்சி அடைகிறது. இப்பிரசுரம் விரிவாக விற்பனை செய்யப்படுவது மிகவும் உதவியாக இருக்கும் என்றும் கருது கிறது.

சென்னை
20—10—1962

மா. க. செயற்குழு.

தமிழ் பயிற்சி மொழி!

....

தமிழ் நாட்டில் தமிழ் மாணவர்களுக்கு, தமிழ் ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் பாடங்கள் போதித்து வருகிறார்கள். இது மாறவேண்டும். தமிழில் போதித்தால் எளிதில் புரியும். ஆகவே எளிதில், பல விஷயங்களை விரைவாகக் கற்றுக்கொள்ளலாம் என்று 50 ஆண்டுகளாக பாரதி முதல் பல நல்லறிஞர்கள் கூறி வருகிறார்கள்.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பல விசாரணைக் குழுக்களும், இதனையே கூறின.

ராஜாஜி மந்திரிசபையின் உறுப்பினராயிருந்த அவினாசிலிங்கம் செட்டியார் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்க ஆணை பிறப்பித்தார்.

கல்லூரிகளில் தேசிய மொழியை போதனா மொழியாக்க வேண்டுமென ராதாகிருஷ்ணன் கல்விக் குழு சிபாரிசு செய்தது.

1963-க்குள் அவ்வாறு செய்யவேண்டுமென அக்குழு செய்த சிபாரிசை 37 பல்கலைக் கழகங்கள் அமுல் செய்துவிட்டன.

தமிழ் நாட்டில் ஆங்கிலமே பயிற்சிமொழியாக இருக்க வேண்டுமென பல்கலைக் கழகம் பிடிவாதமாகக் கூறிவந்தது.

அதனைமீறி சில கல்லூரிகளில் தமிழில் பாடபோதனா மொழியாவதை அங்கீகரிக்குமாறு பல்கலைக் கழகம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

இதனால் தமிழகம் முழுவதிலும் தமிழ் பயிற்சி மொழியாகும் என்று தமிழர் எதிர்பார்த்தனர்.

ஆனால் தேசிய பரம்பரையையும், சர்க்காரின் விளம்பரப் படுத்தப்பட்ட கொள்கைகளையும் மீறி பக்தவத்சலம் சர்க்கார் அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறார். " அதில் நீண்ட நெடுங் காலத்துக்கு ஆங்கிலத்துக்குப் பதில் தமிழ் பயிற்சி மொழியாகாது " என்று அறிவித்திருக்கிறார்.

பள்ளிகளில் மீண்டும் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக உயிர்ப்பிக்க கல்வி மந்திரி உத்தரவு போட்டிருக்கிறார்.

இது வெள்ளத்தை எதிர்த்து நீந்தும் போக்கு. இதைத் தமிழ் மக்கள் அனைவரும் எதிர்க்கிறார்கள்.

இதன் பின்னணியை அறிந்துகொள்ளப் பயிற்சி மொழிப் பிரச்சினையின் வரலாற்றை ஆராய்வது அவசியம்.

2. பயிற்சி மொழியும் மொழிப் பயிற்சியும்

முதலில் மேற்குறிப்பிட்ட இரு தொடர்களின் பொருள் என்னவென்று நாம் தெரிந்து கொள்ளுவோம். இவையிரண்டையும் குழப்பி, வேறுமொழி பயிலாவிட்டால் நாம் கிணற்றுத் தவளைகளாகி விடுவோம் என்று பலர் உண்மையிலேயே அஞ்சுகிருர்கள்.

பயிற்சிமொழி என்பது விஷயஞானம் ஏற்படுவதற்காக மாணவர் பயிலும் கணக்கு, விஞ்ஞானம், வரலாறு, மனிதவியல், பொருளியல், அரசியல், வானவியல், முதலிய நூல்களை கற்றுக் கொள்ளத் தமிழைக் கருவியாகக் கொள்ளுதல். தமிழ் பயிற்சி மொழி என்ருல் வகுப்பில் ஆசிரியர் தமிழில் பேசுகிப்பார். புத்தகங்கள் தமிழில் இருக்கும். மாணவர்கள் தேர்வுகளில் தமிழில் விடையை எழுதுவார்கள்.

மொழிப் பயிற்சியென்ருல், ஒரு மொழியை அதிலுள்ள நூல்களைக் கற்றுக்கொள்வதற்காக கற்பிப்பது ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், இவற்றை விஞ்ஞானம் கற்பதற்கும் இந்தியை, ராஜ்ய, மத்தியத் தொடர்பிற்காகவும் கற்கலாம். ஆனுல் அவற்றை மொழியறிவிற்காக கற்கலாம்.

இன்று கல்லூரிகளில் உள்ள நிலை என்ன? ஆங்கிலம் பயிற்சி மொழியாக உள்ளது. தமிழை, மொழிப்பயிற்சிக்காகக் கற்கிறோம்.

சுதந்திர நாடு எங்கும் ஒரு அந்நிய மொழி பயிற்சி மொழியாக இடம்பெறவில்லை. அந்நாடுகளில் - தாய்மொழியே பயிற்சி மொழியாக உள்ளது. அயல்நாட்டு மொழிகளை மொழிப்பயிற்சிக்காகக் கற்றுக்கொடுக்கிருர்கள்.

உதாரணமாக பிரான்ஸ் தேசத்தில் பிரெஞ்சு மொழியே பயிற்சிமொழி. மொழிப்பயிற்சிக்காக இங்கிலீஷ், இத்தாலிய மொழி, ஸ்பானிய மொழி, ஜெர்மன் ஆகிய ஏதாவதொரு மொழியை மாணவன் கற்கலாம்.

ஜப்பானில், ஜப்பானிய மொழியே பயிற்சிமொழி. ஆங்கிலம் இஷ்டபாடமாக உயர்நிலைப்பள்ளிகளிலும், கட்டாயப் பாடமாக கல்லூரிகளிலும் கற்பிக்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியில் பயிற்சி மொழி ஜெர்மன் மொழியே. ஆங்கிலம் துணைமொழியாகக் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனியில் ஜெர்மன் மொழியே பயிற்சி மொழி. ஆங்கிலம் கட்டாயத் துணைமொழியாக இருக்கிறது.

சோவியத் ருஷ்யாவில், பலமொழிகள் பேசும் மக்கள் உள்ளனர். அவரவர் மொழிகளே பயிற்சி மொழிகளாக உள்ளன. ருஷ்ய மொழி கட்டாயத் துணை மொழி, இது தவிர வேறொரு ஐரோப்பிய மொழியும் துணைமொழியாக உள்ளது.

சுவிடனில் சுவீடிஷ் மொழியே பயிற்சி மொழி, பல துணை மொழிகள் ஒரு மாணவன் கல்லூரிப் படிப்பு முடிக்குமுன் கற்றுக் கொள்ளவேண்டும். இங்கிலீஷ் 11 வயதுக்குமேல் கற்பிக்கப்படுகிறது. ஜெர்மன் மொழி 8–வது வகுப்பிலிருந்து கற்பிக்கப்படுகிறது. படிப்பின் கடைசி இரண்டு வருஷம் பிரெஞ்சுமொழி கற்பிக்கப்படுகிறது. ருஷ்யமொழி கற்பிக்க இப்பொழுது முயற்சி நடைபெறுகிறது. ஆகவே ஒவ்வொரு மாணவனும் 4 மொழிகளை படிப்பு முடியும்போது பயின்று தேர்ச்சி பெற்றிருப்பான்.

தமிழ்நாட்டில் தமிழைப் பயிற்சி மொழியாக்கிவிட்டு, துணை மொழியாக எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்பிக்கலாம். அவற்றுள் இந்தியும், ஆங்கிலமும் இருக்கவேண்டும் என பல கல்விக்குழுக்கள் சிபாரிசு செய்துள்ளன. இதைப் புரிந்துகொள்ளாமல், தமிழைப் பயிற்சி மொழியாக்க விரும்புகிறவர்கள், ஆங்கிலத்தை விரட்டியடிக்க வேண்டுமென்று சொல்லுவதாக ஆங்கில தாசர்கள் பொய்க்குற்றம் சாட்டுகிறார்கள்.

இனி இப்பிரச்சினையின் வரலாற்றை ஆராய்வோம்.

3. முதற்குரல் - பாரதி

தற்காலப் பிரச்சினைகள் பலவற்றிற்கு முற்போக்கான யோசனைகளை முதலில் கூறியவர் பாரதி. கல்வித்துறையில் பயிற்சி மொழி பற்றி 50 ஆண்டுகளுக்கு முன்னரே மிக தீவிரமான, புரட்சிகரமான, நாட்டுக்கு நன்மை விளைவிக்கும் கருத்துக்களைப் பாரதி வெளியிட்டார்.

1916 ஏப்ரல்மாதம் 3-ம்தேதி "சுதேசமித்திரனில்" பாடமொழி குறித்துப் பாரதி எழுதுகிறார். அதற்குக் காரணமாக இருந்தவை "மாடர்ன் ரிவியூ" என்ற பத்திரிகையில் வெளியான இரண்டு கடிதங்கள். ஒன்றை எழுதியவர் பேராசிரியர் யதுநாத் சர்க்கார். இவர் வரலாற்றுப் பேராசிரியர். அக்கடிதத்திலுள்ள கருத்தை மறுத்து ஒரு கடிதம் திரு. நீலகண்டய்யர் எழுதினார். அவரும்

வரலாற்று ஆசிரியர். இவை இரண்டையும், குறித்துப் பாரதி தமது கருத்தைத் தெரிவித்தார்.

"கலாசாலையில் சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும், தேச பாஷைகளிலே கற்றுக்கொடுத்தால் நல்ல பயன் விளையு மென்றும் ஸ்ரீ சர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலி பண்டிதர் சொல்கிறார்" பாஷைத் தொல்லை பெருந்தொல்லையாக இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட மட்டில் பிள்ளை களுக்கு சரித்திரப்பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக்கொடுப்பது அதிக பயன்படு மென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும் பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும், வழக்குப் பிழை களும் நிறையச் செய்தபோதிலும் மொத்தத்தில் தமிழைக்காட் டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள், சரித்திர விஷயங்களை விபவரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக்காட்டி லும் நன்றாகச் சொல்லவருகிறது".

"இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டய்யரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!! (பாரதி தமிழ்—பக்கம் 102)

'சொந்த மொழியில் கற்பிக்கவேண்டும்' எனக் கூறிய வங்காளப் புலவரை வாழ்த்தி, 'ஆங்கிலத்தில் கற்பிக்கவேண்டும்' என்ற திருநெல்வேலி புலவரைக் கண்டிக்கிறார் பாரதி. பின்னர் தமது கருத்தாக தமிழில் கற்பிக்க முடியுமென்று ஆணித்தரமா கக் கூறுகிறார்.

"இந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்கு கிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற் றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர் பும் உடைய பாஷை வேறொன்றுமே யில்லை."

(பாரதி தமிழ்—பக்கம் 103)

இதுமட்டுமல்ல, ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லும் அடிமைப் புத்தியுடையோருக்குப் பாரதி சவால் விடுத்துச் சொல் லுகிறார்.

"மிகவும் விரைவிலே தமிழின் ஒளி, உலகம் முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரை

இந்த பண்டிதர்களாக இருப்போர் (ஆசிரியர்) தமக்குத் தமிழ்ச் சொல்லே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்கவேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.''

இவ்வாறு, ஒரு மோதுதலோடுதான் இப்பிரச்சினை தொடங்கிற்று. நீலகண்டய்யர் தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கல்ல. அவருடைய பயிற்சியும், சூழ்நிலையும், அவரை வளர்த்த கல்வி முறையும், அவர் வெளியிட்ட கருத்துக்களை அவரை உண்மையிலேயே நம்பிப் பேசவைத்தன. ஆங்கில மோகம் தலைக்கேறியிருந்த காலம் அது. எல்லாத் துறைகளிலும் ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஆறுவது வகுப்புக்கு மேல் பட்டப்படிப்பு வரை ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருந்தது. ஆங்கில ஆட்சியை ஆதரித்த திராவிடக் கட்சியினரும், அதனை எதிர்த்த தேசிய மிதவாதிகளும், ஆங்கிலத்திலேதான் பேச்சுமாரி பொழிந்தனர். அரசியல் பத்திரிகைகளும் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டு வந்தன. படித்த தமிழர்கள் ஒருவருக்கொருவர் ஆங்கிலத்திலேதான் பேசிக்கொண்டனர். அரசாங்க அலுவல்களுக்கு ஆங்கில அறிவு முக்கிய தகுதியாகக் கருதப்பட்டது. அக்காலம் வெளியிடப்பட்ட ஒன்றிரண்டு தமிழ்ப் பத்திரிகைகளில் கூட தலைப்புகள் ஆங்கிலத்திலேயே கொடுத்து எழுதப்பட்டன. இச் சூழ்நிலையில் நீலகண்டய்யருடைய கருத்து வியப்புத் தருவதல்ல. அக்காலத்தில் படித்த பிராமணர்களும் சரி, அவர்களை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்ட பிராமணரல்லாதார் இயக்கத் தலைவர்களாயினும் சரி, தங்களது ஆங்கில அறிவையும், ஆங்கிலத்தில் பேசும் திறமையையும், போட்டி போட்டு விளம்பரப்படுத்திக் கொண்டார்கள்.

வங்கப் பிரிவினையின் காரணமாக வங்காள நாட்டில் கொழுந்து விட்டெரியத்தொடங்கிய தேசிய உணர்வில் மொழி உணர்வும் கிளர்ந்தெழுந்தது. அது ஆங்கிலம் படித்த வங்காளிகளை விழித்தெழச் செய்தது. இதன் விளைவே பேராசிரியர் யதுநாத் சர்க்காரின் கடிதம். இம்மொழி யுணர்வை வளர்த்துப் போற்றியவர் ரவீந்திரநாத் தாகூர். அவர் தேசியக்கல்வி என்ற தலைப்பில் பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அவற்றுள் ஒன்று பாடம் போதிக்கும் பாஷை.''

பாரதியின் கருத்துக்களுக்கு அக் கட்டுரையில் காணப்பட்ட கருத்துக்கள் ஒத்திருந்தமையால் பாரதி அக் கட்டுரையைமொழி பெயர்த்து வெளியிட்டார். இக் கட்டுரையைத் தாகூர் 1917-ல்

எழுதினார். டிசம்பர் மாதம் பாரதி இதனை மொழி பெயர்த்து வெளியிட்டது எப்பொழுது என்று தெரியாவிட்டாலும், அக் கட்டுரை வெளியான சில மாதங்களுக்குள் தமிழ் மொழி பெயர்ப்பு வெளிவந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமிருக்கிறது.

1920 மே மாதத்தில் 'தேசியக் கல்வி' என்னும் பொருள் பற்றிப் பாரதி ஐந்து கட்டுரைகள் வெளியிட்டார். தமிழ் மக்களை தேசிய உணர்வு பெற்றவர்களாகவும், நமது பண்பாட்டில் பெருமையும், வருங்கால வளர்ச்சியில் ஆர்வமும் கொண்டவர்களாகவும் மாற்றுவதற்கு எத்தகைய கல்வி முறை வேண்டும் என்று அவர் இக் கட்டுரையில் விரிவுற எழுதியிருக்கிறார். இப்புதிய கல்வித் திட்டத்தில் பயிற்சி மொழி பற்றியும், அவர் தமது கருத்தைத் தெளிவாகக் கூறுகிறார்.

"தமிழ் நாட்டில் தேசியக் கல்வி யென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையை பிரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்லீஷ் மூலமாகவும், தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால் அது 'தேசியம்" என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேசபாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்துவிடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூரண சகாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்கு தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் பிரதானம் என்று நான் சொல்லுவதால் டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கட்சியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்யபாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்துவிடலாகாது. தமிழ் நாட்டிலேயே தமிழ் சிறந்திடுக! பாரத தேச முழுவதிலும் எப்போதும் போலவே 'வடமொழி வாழ்க' இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும், வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. என்றும் தமிழ் நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக!

(சமூகம்—பக்கம்-18)

பாரதி தமிழ் நாட்டு மக்களிடையே இக்கருத்தைப் பரப்புவதற்குத் தீவிரமான முயற்சி எடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல், இக்கருத்தைச் செயல்படுத்த முன் வந்தவர்களுக்கு ஊக்கமளித்து வாழ்த்து கூறினார். பூனாவில் கார்வே என்னும் கல்வி அறி

ஞர் பெண்களுக்கென்று தனியாகப் பல்கலைக் கழகம் ஒன்று கிறு விஞர். அதற்குமுன் உலகிலேயே அதைப் போன்ற பல்கலைக் கழகங்கள் ஜெர்மனியில் ஒன்றும், ஜப்பானில் ஒன்றுமாக இரண்டு தான் இருந்தன. பெண்கள் விடுதலையில் ஆர்வமுடைய பாரதி இம்முயற்சியை வரவேற்ருர். மேலும், இப்பல்கலைக் கழகத்தில் தேச பாஷைகளின் மூலமாகவே பாடங்கள் கற்றுக் கொடுக்கப் படும் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியோடு இப்புது முயற்சியை வரவேற்ருர். 1916 ஏப்ரல் 26-ம் தேதி பாரதி இது குறித்து எழுதுகிருர்.

"ஸ்ரீ கார்வே ஏற்படுத்தப் போகிற சர்வ கலா சங்கத்தில் தேச பாஷைகளின் மூலமாகவே சகல சாஸ்திரங்களும் கற்றுக் கொடுக்கப்படும். இவருடைய சர்வகலா சங்கம், ஸ்தாபனமாகிப் பத்து வருஷம் நடக்குமானல். அதுவரை நம்நாட்டு ஆண் பள்ளிக் கூடங்களில் இங்கிலீஷ் பாஷை மூலமாகவே கல்விப் பயிற்சி நடந்துவருமானல் பிறகு நமது நாட்டில் ஆண்களைக் காட்டிலும், பெண்கள் உயர்ந்த கல்வியும் அறிவுத் திறமையும், சாஸ்திரப் பழக்கமும் பெற்றிருக்கும்படி நேரிடும். அந்த நிலை ஏற்படு முன்னுகவே ஆண் பள்ளிக் கூடங்களிலும், சுதேச பாஷைகளின் பழக்கம் அதிகப்பட்டுவிடுமென்று நம்புகிறேன்."

(பாரதி தமிழ்—பக்கம்-107)

4. பயிற்சிமொழிபற்றி மகாத்மாகாந்தி

வங்கத்திலும், தமிழ் நாட்டிலும், மகாராஷ்டிரத்திலும் இக் கருத்துக்கள் பரவிய காலத்தில் மகாத்மா காந்தி தென்ஞப்பிரிக்காவில் தான் தொடங்கிய "டால்ஸ்டாய் பண்ணை" என்ற தேசியப் பள்ளியில் தேசிய மொழிகளின் மூலமாகவே கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார். இந்தி, தமிழ், குஜராத்தி, உருது, ஆகிய மொழிகள் குழந்தைகளுக்கு கற்பிக்கப்பட்டன. மற்ற பாடங்கள் யாவும் மாணவர்களின் தாய் மொழிகளிலேயே கற்பிக்கப்பட்டன. இது குறித்துக் காந்தியடிகள் கூறுவதாவது :

"தமிழ் மொழியையும், உருது மொழியையும், கற்பிக்கும் பொறுப்பை நான் மேற்கொண்டேன். சிறைவாசத்தின்போது சிறிதளவு தமிழ் நான் கற்றுக்கொண்டிருந்தேன். போப் பாதிரியார் எழுதிய தமிழ் கையேடு என்ற புத்தகத்தைத் தவிர தமிழ் நூல் எதனையும் நான் கற்றதில்லை. எனினும் கையிருப்பை வைத்து நான் கற்பித்தேன். தேசிய மொழிகளில் எனக்கிருந்த

ஆர்வமும் என்னுடைய மாணவர்களின் 'அறியாமையும், நான் சிறந்த ஆசிரியர் என்று அவர்கள் கருதும்படி ஆயிற்று''

இப்பள்ளியில் கற்பித்த ஆரம்ப அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு காந்தியடிகள் தாய்மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தார். 'தாய் மொழியில் பாட போதனை' என்ற கோஷம் தேசிய இயக்கத்தின் பிரிக்கமுடியாத அம்சமாயிற்று. இக் கொள்கையை எழுத்தின் மூலமும், பேச்சின் மூலமும் காந்தியடிகள் நாட்டினருக்கு எடுத்துரைத்தார். பயிற்சி மொழியாக ஆங்கிலம் இருப்பதன் கேடுகளைக் காந்தியடிகள் கீழ்வருமாறு விளக்கினர்.

"காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்களோடு நான் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள், ஆங்கிலத்தின் மூலம் பல பாடங்களையும் கற்கும் மாணவர்கள் ஆறு வருஷ காலத்தை அறுவசியமாக வீணுக்குகிறுர்கள், என்று கூறினர். நமது கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களின் தொகையை ஆறுல் பெருக்கினுல் எத்தனை ஆண்டுகள் காலம் நாட்டுக்கு நஷ்டமாகிறது என்பதை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம்."

'வெகு சீக்கிரத்தில் நாம் விடுதலை பெறுவோம். விடுதலை பெற்ற நாட்டிற்குக் கல்விப் பயிற்சியுடையவர்கள் தேவை. சொந்த நாட்டிலேயே அயல்நாட்டார் போல் திரியும், போலிப் பட்டதாரிகள் நமக்குத் தேவையில்லை. நாட்டின் இதயத்திற்குச் செய்தி சொல்லும் ஆண்மை மிக்கவர்கள் தேவை. ஏழைகளுக்குத் தொண்டு புரிந்தவர்கள் அவர்களுடைய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டவற்றை அவர்களுடைய மொழியிலேயே கற்பிக்க வல்லவர்கள் தேவை இன்று நமது உயர்ந்த சிந்தனைகளில் நம்முடைய மனைவிமார்களும், தங்கைமார்களும்கூட பங்குகொள்ள முடிவதில்லை; போஸ், ராய் முதலிய பேராசிரியர்களின் ஆராய்ச்சிகள் நாட்டின் பொதுக் கலைச் செல்வமாக ஆகாமலிருப்பது, நமக்கெல்லாம். அவமானமாக இருக்கிறது.

"அந்நிய மொழி, பயிற்சி மொழியாக இருப்பதனுல் நமது குழந்தைகளின் மூளை வளர்ச்சி தடைப்படுகிறது. அது நரம்புத் தளர்ச்சியை உண்டாக்குகிறது. நெட்டுருப்போட்டு ஒப்பிப்பதற்கும், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாக மாற்றுவதற்கும், அந்நியப் பயிற்சிமொழி காரணமாகிறது. சுய சிந்தனையை அழித்து விடுகிறது. பெற்ற அறிவைக் குடும்பத்துக்குள்ளோ, மக்களிடையேயோ பரப்புவதற்குத் தடையாக இருக்கிறது.''

"எனக்கு மட்டும் ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமானால் நமது சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அன்னிய மொழியில் பாடம் கற்பிப்பதை உடனடியாக நிறுத்திவிடும்படி உத்தரவிடுவேன். இக்கட்டளைக்கு மறுப்புத் தெரிவிக்கும் ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கி விடுவேன். பாட புத்தகங்கள் வெளிவரும் வரை காத்திருக்கமாட்டேன். பயிற்சி மொழி மாறினால் பாடப் புத்தகங்கள் தாமாகவே வெளிவரும் முதிர்ந்த நோய்க்கு அதிர்ச்சி வைத்தியம்தான் தேவை." (5-7-28 நவ இந்தியா)

5. டி. கே. சியின் சாட்சியம்

தேசிய இயக்கத்தின் ஒரு அம்சமாக நாடு முழுவதும் இக்கொள்கை பரவிற்று. பல ராஜ்யங்களில் பயிற்சி மொழிபற்றி விசாரிக்க விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. சென்னை மாகாணத்திலும், 1935-ம் வருஷம் சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தது. குழுவின் தலைவர் ஆங்கிலேயர். வேறு இரண்டொரு உறுப்பினர்கள் ஆங்கிலேயர்கள், மற்ற இந்திய அங்கத்தினர்களும், ஆங்கிலேயரைவிட ஆங்கில மோகம் உடையவர்கள். இக்குழு விசாரணை நடத்திய இடங்களிலெல்லாம், தேசிய மொழியார்வம் உடையவர்களும் நம் நாட்டு வருங்கால வளர்ச்சி நம்பிக்கையுடையவர்களும் முன்வந்து சாட்சியம் கூறினார்கள். அவ்வாறே கூறிய சாட்சியங்களில், தமிழ்நாட்டிற்கு இக்குழு விஜயம் செய்தபோது ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கொடுத்த சாட்சியம் முக்கியமானது. குழுவினருக்கும், அவருக்கும் இடையே நடந்த வாக்குவாதத்தை திரு. டி. எம். பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் தாம் எழுதிய 'டி. கே. சி.' என்ற நூலில் முழுவதும் கொடுத்திருக்கிறார்கள். அது வருமாறு:—

கமிஷன் அங்கத்தினரான ஒரு வெள்ளைக்காரர்: உங்கள் வெர்னகுலரில் சயன்ஸ் சம்பந்தமான சொற்களே இல்லையல்லவா? அது உண்மைதானே?

டி. கே. சி: இந்தக் கேள்விக்கு இடமேயில்லையே.

கமிஷனர்: ஏன் இடமில்லை.

டி. கே. சி: தமிழில் சயன்ஸ் இருந்தாலல்லவா அக்கலைக்குரிய சொற்கள் இருக்கும்?

கமிஷனர்: ஏது? எங்கள் வேலையை எளிதாக்கிவிடுவீர்கள் போலிருக்கிறதே. சயன்ஸும் இல்லை; சொற்களும் இல்லை. ஆகவே சயன்ஸை தமிழில் கற்பிக்க முடியாதென்று முடிவுகட்ட வேண்டியதுதானே.

டி. கே. சி: ஆமாம். முடிவுகட்டவேண்டியதுதான். நூறு நூற்றைம்பது வருஷங்களாக வெள்ளைக்காரர்களாகிய நீங்கள் வந்து எங்களுக்குக் கல்வி கற்பித்துக் கொடுத்தும் நாங்கள் கண்ட பலன் என்ன? எங்களுக்கு சயன்ஸ்கிடையாது; சயன்ஸ் தெரியாது என்பதுதானே—சரி; தமிழில் சயன்ஸ் சொற்கள் இல்லையென்று சொன்னேன். நீங்களும் தலையை ஆட்டிவிட்டீர்கள். போகட்டும் போகட்டும்—தமிழ் எப்படியாவது போகட்டும். உங்கள் வெர்னகுலரான ஆங்கிலத்தில் சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் உண்டோ?

கமிஷனர்: என்னசார் இது? ஏன் இல்லை? இல்லாமலா இத்தனை நாளும் நாங்கள் சயன்ஸ் படித்திருக்கிறோம். அதைப் பற்றிய ஆராய்ச்சியெல்லாம் நடத்திவருகிறோம்?

டி. கே. சி.: ஆம் ஐயா! ஆராய்ச்சிகள் எல்லாம் பலமாய்த் தான் நடத்திவருகிறீர்கள். அது வாஸ்தவம்தான். ஆனால் அந்த அறிவியற் கலைகளின் பெயர்களையே கொஞ்சம் பாருங்களேன்.

கமிஷனர்: பார்த்தால்?

டி. கே. சி.: உங்கள் அறிவியற் கலைகள் எல்லாம் என்ன? அரித்மெடிக், பிசிக்ஸ், பிஸியாலஜி, பையாலஜி ஸரிவாலஜி, சைகாலஜி இன்னும் என்ன என்ன 'யாலஜி'கள் எல்லாமோ சொல்கிறீர்கள். இந்தப் பெயர்களெல்லாம் ஆங்கிலமா? இல்லையே. கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் இருந்து வந்த பெயர்கள்தானே. கலைகளின் பெயர்களே உங்களுக்குச் சொந்தமில்லையே. கலைகள்மட்டும் எப்படிச் சொந்தமாகும்? உங்கள் வெர்னகுலரே இப்படிக் கடன்வாங்கிப் பிழைக்கும்போது எங்கள் தாய்மொழியும் இதேபோல பெயர்களைக் கடன்வாங்கினால் என்ன? பிராமிசரி நோட் எழுதிக் கொடுக்க ஸ்டாம்பும் தாளும் எங்களிடம் கிடையாதா? இல்லை கிரீக்கும், லத்தீனும் கடன் தரமாட்டோம் என்று சொல்லுமா? இல்லை — இந்தச் சொற்கள் உங்கள் வெர்னகுலரில் வந்தபிறகு வாயில்நுழைய முடியாதபடி தவிக்கிறதோ, அப்படியே எங்கள் தமிழிலும் தவிக்கட்டுமே; என்ன ஐயா குறைந்துவிடும்.

கமிஷனர்: (கொஞ்சம் திணறிப்போய்ப் பின்னால்) நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். என்றாலும் விஞ்ஞானக் கருத்துக்களை உங்கள் தாய்மொழியில் விளங்கும்படி சொல்ல முடியாது என்பதையாவது ஒத்துக்கொள்கிறீர்கள் அல்லவா?

டி. கே. சி.: யார் ஒத்துக்கொள்ளுகிறார்கள்? அடிப்படையான விஞ்ஞானக் கருத்துக்கள் எதையுமே, அது எவ்வளவு சிக்க

லானதாக இருந்தாலும் தமிழில் விளங்கும்படி அழகாகச் சொல்ல முடியும்.

கமிஷனர்: சரிதான்! எங்கள் வெள்ளைக்குலரில் எதைச் சொல்ல முடிகிறதோ, அதையெல்லாம் தமிழிலும் சொல்ல முடியும் என்று கூறுகிறீர்.

டி. கே. சி.: ஆமா! அதற்குச் சந்தேகமா? தமிழில் சயன்ஸ் சம்பந்தமான சொற்கள் இல்லையென்பதால் சயன்ஸையே தமிழில் கற்பிக்க முடியாது என்று கருதுவது எவ்வளவு தவறானது என்று இப்போதாவது தெரிகிறதா?

சாட்சியம் இவ்வாறு முடிவடைந்தது. வெள்ளைக்காரக் கமிஷனருக்கு எப்படியோ உண்மை கொஞ்சம் விளங்கிவிட்டது. ஆனால் 'கால் குழாய் மாட்டிய கருப்புத் துரைகளாகிய' நம்மவர்களுக்கோ (கமிஷனர்களாக இருந்தவர்களுக்குத்தான் விஷயம் விளங்கவில்லை) ஆங்கிலத்தை, விட்டுவிடமுடியுமா? ஆங்கிலத்தைத்தமிழாக்கிக்கொண்டால் என்ன அனர்த்தம் விளைந்துவிடுமோ என்றுதான் ஏங்கினார்கள் என்று கேள்வி.

'எல்லாம் தமிழில் முடியும்' என்று கட்டியம் கூறுபவர் டி. கே. சி. அதனை நிரூபித்துக்காட்டவும் அவரால் முடிந்தது. சந்தேகச் சொல் அல்ல முக்கியம், சொற்கள் [illegible] தான் முக்கியம், என்று சொல்லுகிறார்.

(ரஸிகமணி டி.கே. சி. பாஸ்கரத் தொண்டைமான் பக்: -88-92)

இக்கமிஷன், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்க சிபாரிசு செய்தது. ஆனால் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சிமொழியாக காலம் வரவில்லை என்று கூறிற்று.

கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றது.

1132-92

6. மறைமுகத் தாக்குதல்

பயிற்சி மொழி பற்றிய நியாயமான கருத்துக்கு ஆதரவு திரண்டது. ஆட்சியாளரும் அதிகாரிகளும் ஆங்கில பக்தர்களும் நேரடியாக இதனை எதிர்க்க முடியவில்லை. எனவே அவர்கள் இம்மாற்றத்தைக் கொண்டுவரும்போது ஏற்படக்கூடிய சிரமங்களை எடுத்துக்கூற ஆரம்பித்தனர்.

முதலாவது விஞ்ஞானம் முதலிய நூல்களைத் தமிழில் கற்பிக்க தமிழில் கலைச்சொற்கள் இல்லை.

இரண்டாவது : வி[illegible]னம் கற்பிக்கவும், வேறு பாடங்களைக் கற்பிக்கவும் பாடப்புத்தகங்கள் இல்லை.

மூன்றாவது : ஆங்கிலத்திலேயே படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தமிழில் போதிக்க முடியாது.

நான்காவது : சென்னை மாகாணத்தில் பல மொழிகள் பேசப்படுகின்றன. இரு மொழிவாரியான பிரதேசங்களில் இரு மொழிகளைப் பேசுவோர் இருக்கிறார்கள். அப்பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்கு எம்மொழியில் போதிப்பது?

ஐந்தாவது : உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கிவிட்டாலும், கல்லூரிகளில் தமிழைப் பயிற்சிமொழியாக்குவது வெகுநாட்களுக்கு சாத்தியமில்லை. ஆகவே உயர்நிலைப் பள்ளிகளில் தமிழில் படித்துவிட்டு கல்லூரியில் பயிற்சி மொழி மாறும்போது மாணவர் மிகவும் சங்கடப்படுவார்களே, மாணவர்களே! கல்வியின் தரமும் குறைந்துவிடுமே!

ஆருவது : உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழே பயிற்சிமொழியாகிவிட்டால் பிறமொழிகளில் வெளிவரும் ஆராய்ச்சிகளையும், அயல்நாட்டில் நடைபெறும் ஆராய்ச்சிகளையும் [illegible]கொள்ளுவது எப்படி? அவ்வாறு அறிந்துகொள்ள [illegible]ல் நாம் கிணற்று தவளைகளாகிவிட மாட்டோமா? விஞ்ஞான ஆராய்ச்சியில் சிறந்தோங்கியிருக்கும் மேல் நாட்டுத் தொடர்பின்றி நம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைபெறுவது எப்படி?

இதே கேள்விகளை இன்றும் கேட்பவர்கள் இருக்கிறார்கள்.

இக்கேள்விகள் புதியவையல்ல. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தி[illegible] பல விசாரணைக் குழுக்கள் இக்கேள்வியை எழுப்பியிருக்கின்றன. அவ[illegible] ஆங்கிலமே பயிற்சிமொழியாக நீடிக்க வேண்டுமென விரும்புபவர் திரும்பச் சொல்லி வருகிறார்கள்.

மேற்கூறிய பிரச்சினைகள் தீர்க்க முடியாத பிரச்சினைகள் [illegible] தீர்க்க அறிவாளிகள் நல்ல யோசனைகள் கூறியுள்ளனர்.

முதலில் கலைச் சொற்களை எடுத்துக் கொள்ளுவோம். தமிழ் நாட்டில் இச்சொற்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி பாரதி சில அடிப்படைக் கொள்கைகளைக் கூறினார்.

இம் முயற்சியில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியும், சேலம் கல்லூரிப் பேராசிரியரும் ஈடுபட்டு, ஒரு பத்திரிகை வெளி

யிட்டு வந்ததை அவர் வரவேற்ருர். அப்பத்திரிகை ஆங்கிலத்தில் வெளிவந்தது—தமிழில் வெளிவரவேண்டுமென்று பாரதி கோரினுர்.

கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்ட காசியில் இருந்த "நாகரி பிரசாரிணி சபையார்" மேற்கொண்ட உபாயத்தை பாரதி தமிழ் நாட்டிலும் கைக்கொள்ளலாம் என்று யோசனை கூறுகிருர்.

ஐரோப்பிய சங்கேதங்களையெல்லாம், எளிய சமஸ்கிருத பதங்களில் போட்டு ஒரு பெரிய அகராதி தயாரித்து வருகிருர் கள். அச்சொற்களை வேண்டியவரை இயன்றவரை தேச பாஷை கள் எல்லாவற்றிலும் கைக்கொண்டு வழங்கலாம். ஐரோப்பாவில் எல்லா பாஷைகளும இவ்வாருகவே லத்தீன், யவன பரிபாஷை களைக் கைக்கொண்டிருக்கின்றன."

பாரதி முதன்முதல் கூறிய யோசனை இது. அச்சொற்கள் பயன்படுத்தப்பட்ட பின் அவை உச்சரிக்கக் கடினமாகவும், தமிழோடு பொருந்தாமலும் இருப்பதையும் கண்டார். பின் தன் கருத்தைத் திருத்திக்கொண்டு கீழ்வரும் யோசனையைக் கூறினுர்.

விஞ்ஞான அருங்கலைச் சொற்களில் தமிழில் ஏற்கெனவே பழக்கத்தில் இருப்பவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

2. பொருள்களின் பெயர்களுக்கு தமிழில் சொல் கிடைக்கா விட்டால் வடமொழிச் சொல்லைப் பயன்படுத்தலாம்.

3. இரு மொழிகளிலும் கிடைக்காவிட்டால் ஆங்கிலச் சொல்லையோ, லத்தீன், கிரேக்கச் சொற்களையோ பயன்படுத்த லாம்.

4. தன்மையைக் குறிப்பிடுதல், செயல்களை விளக்குதல் முதலியவற்றிற்கு தமிழையே பயன்படுத்த வேண்டும்.

தமிழில் கலைச் சொற்கள் இல்லையே, எப்படித் தமிழில் கற் பிக்க முடியும்? என்ற சவாலுக்கு இரு வேறு விடைகள் கிடைத் தன. ஒன்று முழுதும் தமிழில் புதிதாக ஆக்கப்பட்ட சொற்கள். மற்ருென்று பூமுவதும் வடமொழியில் ஆக்கப்பட்ட சொற்கள்.

இவையிரண்டையும் தனித்தனியாகவோ, கலந்தோ, விஞ் ஞான எழுத்தாளர்கள் நூல்களில் பயன்படுத்தினர்.

கடைசியில் அனுபவத்தின் வாயிலாக மொழிச் சிக்கல் விடுவிக் கப்பட்டது. இன்று பெயர்களை சர்வதேசியப் பெயர்களாகவே தமிழில் எழுதுகிருர்கள். பாரதி கருத்துப்படி பழக்கமான சொற் களைப் புறக்கணிக்கவில்லை. விளக்கங்களைத் தமிழிலேயே எழுது கிருேம்.

முதற் கேள்விக்கு இவ்வாறு விடை கிடைத்துவிட்டது.

1937-ல் ராஜாஜி மந்திரிசபை உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கிற்று. அதுமுதல் இன்றுவரை தமிழே தமிழ்நாட்டில் பயிற்சிமொழியாக இருக்கிறது. சென்னையில் உள்ள ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும் தமிழ் தெரியாத பிற மொழி பேசும் மாணவர்கள் பயிலும் பள்ளிகளிலும் மட்டும் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க அனுமதியளிக்கப்பட்டது.

தமிழ் மக்களது நீண்ட நாள் அபிலாஷையில் ஒரு பகுதி வெற்றி பெற்றது. இதற்குப் பல பள்ளி நிருவாகங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆயினும், கல்வி மந்திரி அவிநாசிலிங்கம் மக்களது ஆதரவோடு தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக்குவதில் உறுதிகாட்டி வெற்றிபெற்றார்.

இரண்டாவது பிரச்சினைக்கும் நடைமுறையில் விடைகிடைத்தது. 1937-ல் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்சிமொழியாகும் என்று அறிவிக்கப்பட்டவுடனேயே பல துறைகளில் பாடப் புத்தகங்கள் வெளியாயின. இன்று பாடப் புத்தகங்கள் அதிகமாக இருக்கின்றன என்று வேண்டுமானால் குறைபட்டுக் கொள்ளலாம்.

கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சி மொழியாகலாம் என்பதை எதிர்பார்த்து அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களில் இருவர் பௌதிகத்துக்கும் ரசாயனத்துக்கும் பாடப் புத்தகங்கள் எழுதினர். அவை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டன. தமிழ் பயிற்சிமொழியாகாது என்பது தெரிந்தவுடன் இத் துறையில் முயற்சிகள் கைவிடப்பட்டன. பயனற்ற வேலையை யார் மேற்கொள்ளுவார்கள்?

இரண்டு ஆண்டுகளுக்கு முன் பரீட்சார்த்தமாக சில பாடங்களில் தமிழ் பயிற்சி மொழியாகும் என்றும், இச் சோதனை வெற்றி பெற்றால் எல்லாக் கல்லூரிகளுக்கும் இம்முறை விஸ்தரிக்கப்படும் என்றும் கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் அறிவித்தார்கள். கல்லூரித் தமிழ்ப் பாடப்புத்தகக் குழுவொன்று திரு. ஜி. தாமோதரன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டது. அவர்களுடைய முயற்சியில் பி.ஏ., பி.எஸ்ஸி வகுப்புகளுக்கு 'மைனர்' பிரிவுக்குப் பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோவையில் பி. எஸ். ஜி. கல்லூரியில் பொருளியல் தமிழில் கற்பிக்கப்படுகிறது. அதற்குப் பாடப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆதரவு இருந்தால் பாடப் புத்தகங்கள் எழுது

வதும், வெளியிடுவதும் சாத்தியமானதே என்பதைத்தான் அனுபவம் காட்டுகிறது.

மூன்றாவது ஆசிரியர்கள் பிரச்சினை விஷயத்தை ஆங்கிலத்தில் கற்றுக்கொண்டதால் தமிழில் கற்பிக்க முடியாது என்றால், அவர்களுக்கு விஷயமே புரியவில்லை என்றுதான் பொருள். தற்காலப் பேராசிரியர்கள் தமிழில் கற்பிக்கவும் திறமை படைத்தவர்களே. சிறிதுகாலம் சிரமமாகத்தான் இருக்கும். எந்தப் பெரிய மாறுதலும், தியாகமும் சிரமமும் இல்லாமல் வந்துவிடுமா?

நான்காவது சிறுபான்மையோர் பிரச்சினை. இது பொது விதியல்ல. விதிவிலக்காகும். சென்னையில் தென் மொழிகள் அனைத்தையும் சில பள்ளிகளில் பயிற்சி மொழியாக அனுமதிக்கலாம். ஆந்திர தேச எல்லையில் தெலுங்கையும், கேரள எல்லையில் மலையாளத்தையும், கன்னட நாட்டு எல்லையில் கன்னடத்தையும் தமிழோடு சேர்த்து பயிற்சி மொழியாக ஆக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். வேற்றுமொழி பேசுவோர் எல்லையோரங்களில் வசிக்கிறார்கள். எல்லா இடங்களிலும் இப் பலமொழி பிரச்சினை இருப்பதுபோலக் காட்டுவது, ஆங்கிலம்தான் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற உள்நோக்கோடு சொல்லப்படுவதாகும்.

ஐந்தாவது கல்லூரிகளில் சாத்தியமில்லை என்று எப்படி முடிவுக்கு வரமுடியும்? உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொண்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே கல்லூரிகளிலும் இம்முறை வந்திருக்கவேண்டும். அதற்கேற்ற தயாரிப்புகளைப் பல்கலைக் கழகம் செய்து முடித்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு கல்லூரியில் வராது, ஆகையால் பள்ளிகளிலும் வேண்டாம் என்று சொல்லுவது ஆங்கில மோகிகளின் பிடிவாதத்தைத்தான் காட்டுகிறது. உத்தரப் பிரதேசத்தில் 10 ஆண்டுகளாகவே இந்திதான் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக உள்ளது. இந்தியா முழுவதும் 38 பல்கலைக் கழகங்கள் தேசிய மொழிகளைப் பயிற்சி மொழியாக்கிவிட்டன. தமிழில்மட்டும் முடியாதென்று சொல்லுபவர்கள் காலமாறுதலைப் பார்க்கத் தவறுகிறார்கள்.

ஆறாவது பிரச்சினை, ஐக்கியநாடுகள்சபையில் எல்லோருக்கும் பொதுமொழி யொன்று இருக்கிறதா? இங்கிலீஷ், ஜெர்மன், பிரஞ்சு, ஸ்பானிஷ், சீனம் முதலிய மொழிகளில் பிரதிநிதிகள் பேசலாம். அப்பேச்சு உடனுக்குடன் கேட்பதற்கு மொழி பெயர்ப்பு ஏற்பாடுகள் இருக்கின்றன. சோவியத் நாட்டில் பல

நாடுகளிலும் வெளிவரும் ஆராய்ச்சிக் குறிப்புகள் உடனே ரஷ்ய மொழியில் பெயர்க்கப்படுகின்றன. இதற்கான பலமொழி வல்லுநர்கள் பணிபுரிகின்றனர். நம்நாட்டில் பல மொழி கற்றவர்கள் இல்லையா? மொழிபெயர்ப்புக்கென விஞ்ஞானம் கற்றவர்களைப் பலமொழிகளில் பயிற்சியளித்துத் தயாரிக்க முடியாதா? தவிர தற்கால விஞ்ஞான வளர்ச்சியில் எலெக்ட்ரானிக் கணக்கிடும் இயந்திரங்கள் மொழிபெயர்க்க உதவும் காலம் அண்மையிலேயே வரும். இவை அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் உபயோகத்தில் இருக்கின்றன. மொழிகளைக் குறியீடுகளாக்கும் வேலையில் ரஷ்ய மொழி வல்லுநர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அவ்வேலை முடிந்ததும் புத்தகங்களை இயந்திரமே மொழிபெயர்த்துவிடும். மொழிபெயர்க்கும் சிரமம் மனிதனுக்கு இராது.

எனவே மேற்கூறிய பிரச்சினைகள் தீர்க்கமுடியாத பிரச்சினைகளல்ல.

அவற்றைத் தீர்த்துவைக்கும் வழி முறைகளையும் பயிற்சி மொழி இயக்கம் காட்டிவருகிறது.

7. முதலியார் கமிஷன் சிபாரிசுகள்

23-9-52ல் இந்திய சர்க்கார், உயர்நிலைப்பள்ளிகளில் அளிக்கும் பயிற்சியின் குறைபாடுகளை ஆராய்ந்து சீர்திருத்த முறைகளைச் சிபாரிசு செய்ய திரு. லக்ஷமணசாமி முதலியார் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தது அக்கமிஷன் நாடு முழுவதும் சுற்றி கல்வி அறிஞர்களையும், மக்கள் தலைவர்களையும் சந்தித்து விசாரணை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தது.

அவ்வறிக்கையில் நமது கல்வி முறையின் சரித்திரத்தை ஆராய்ந்து சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. மொழிப் பிரச்சினைபற்றி பழைய முறையிலுள்ள குறைபாடு எதுவென்று அவ்வறிக்கை கீழ்வருமாறு கூறுகிறது:

"தாய் மொழி பயிற்சி மொழியாக இல்லாமல் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது."

(முதலியார் கமிஷன் அறிக்கை பக்கம் 10-வரி 38)

மேலும் கல்விப் பயிற்சியில் மொழிகளின் ஸ்தானத்தைப் விரிவாக ஆராய்ந்து கீழ்க்கண்ட முடிவுக்கு வருகிறது:

1. "தாய்மொழி அல்லது பிரதேச மொழியே பொதுவாக உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சிமொழியாக இருத்தல்வேண்டும்

சிறுபான்மை மொழி பேசுவோருக்கு மத்தியக் கல்வி ஆலோசனைக் குழு சிபாரிசு செய்துள்ள வகையில் சலுகைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

2. நடுத்தர கல்வி நிலையில் ஒவ்வொரு குழந்தையும் இரு மொழிகள் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தியையும் இங்கிலீஷை யும் 5-ம் வகுப்பு முடிந்தவுடன் கற்பிக்க ஆரம்பிக்கவேண்டும். ஒரே ஆண்டில் இரு மொழிகளின் பயிற்சியையும் தொடங்குதல் கூடாது.

3. உயர்நிலைக் கல்வி நிலையில் இரண்டு மொழிகள் கற்பிக்கப் படவேண்டும். அவற்றுள் ஒன்று தாய்மொழி அல்லது பிரதேச மொழியாக இருத்தல்வேண்டும்.''

(முதலியார் கமிஷன் அறிக்கை – பக்கம் 73

மேற்கூறிய அறிக்கைப்படி சிபாரிசுகளை அமுல் நடத்த சென்னை அரசாங்கம் 1953ல் குழுவொன்றை நியமித்தது. தனது அறிக்கையை வெளியிட்டது, அதன் சிபாரிசுகளை சர்க்கார் ஏற் றுக் கொள்ளவில்லை· 1955ல் மற்றுமோர் குழுவை அரசாங்கம் நியமித்தது. அதன் சிபாரிசுகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

கடைசியில் அக்குழுக்களின் சிபாரிசுகளை முடிவு செய்ய 1956ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஒரு சட்ட சபைக் குழுவை சட்ட சபை தேர்ந்தெடுத்தது. அதன் அங்கத்தினர்களுள் திரு லக்ஷமணசாமி முதலியாரும் ஒருவர். தோழர் ராமமூர்த்தியும் அக்குழுவின் அங்கத்தினர். மூன்று மாதங்களில் இக்குழு தனது கருத்துக்களை அரசாங்கத்திற்குத் தெரிவித்தது.

அவ்வறிக்கையில் பயிற்சி மொழிபற்றியும் மொழிப்படிப்பு பற்றியும் கீழ்க்கண்டவாறு குழுவினர் கூறுகின்றனர். இவ் வறிக்கை ஏகமனதாகும்.

'' பாடப் பயிற்சியில் தேவையான மாறுதல்களை விவாதிக்கும் இக்கட்டத்தில் மிக முக்கியமான மொழிப் பிரச்சினையை நாங் கள் விவாதிக்க விரும்புகிறோம். தாய்மொழி, ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளுக்கு எவ்வளவில் தராதர முக்கியத்துவம் அளிக் கப்படவேண்டும் என்பது முக்கியமான கேள்வி. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, தாய்மொழி யென்பது விவாதத்துக் குரிய விஷயமாக இல்லை. பயிற்சிமொழியாக அது பர்ட்சார்த்த மாக இருந்த காலம் தாண்டிவிட்டது. ஆங்கிலத்திலிருந்து தாய் மொழிக்கு ஏற்பட்ட மாறுதல் வெற்றிகரமாக முடிந்துவிட்டது.

இம்மாறுதல் நன்மையையே விளைவித்திருக்கிறது. எண்ணங்களை தாய்மொழியில் வெளியிடுவதில் மாணவர்கள் முன்னிலும் மிகுதியாக முன்னேறியுள்ளமையே இதற்குச் சான்று. இப்போதுள்ள முறையை மாற்றுவதற்கு அவசியம் இல்லை.

கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்சி மொழியாகத் தொடர்ந்திருப்பதைப் பற்றி, பள்ளிப் பயிற்சியைப் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாம் விவாதிக்க வேண்டியதில்லை. எனினும் இப்பிரச்சினைக்கும், பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சிக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதால் இதை ஒதுக்கிவிட முடியாது. 'அரசாங்க மொழிக் கமிஷனுக்கு' சென்னை அரசாங்கம் தனது அறிக்கையை இன்னும் அனுப்பவில்லை யென்றும், நிபுணர்கள் இவ்வறிக்கையைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எங்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில் விஞ்ஞானப் பாடங்களுக்கும், அவையல்லாத மனிதவியல் பாடங்களுக்கும் வேறுபாடு காட்ட வேண்டுமென்று அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது. மனிதவியல் பாடங்களை (சரித்திரம், பொருளியல் முதலியன) நடத்தும் பயிற்சி மொழியை மாற்ற உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று நாங்கள் நம்புகிறோம். 1965 வரை ஆங்கிலம் விஞ்ஞானப் பாடங்களுக்குப் பயிற்சி மொழியாக இருக்கும்''

(சட்டசபைக் குழுவின் அறிக்கை—பக்கம் 25)

இந்தியா முழுவதிலும் உயர்நிலைக் கல்வியை ஆராய்ந்த லக்ஷ்மணசாமி முதலியார் கமிஷனும், அதன் சிபாரிசுகளை தமிழ் நாட்டிற்குப் பொருத்தமாக்கி, உறுதிப்படுத்த சிபாரிசுகள் செய்வதற்காக நியமிக்கப்பட்ட லக்ஷ்மணசாமி முதலியாரை அங்கத்தினராகக் கொண்ட சட்டசபைக் குழுவும் கீழ்வரும் கருத்துக்களை ஒப்புக்கொண்டுள்ளன.

(1) தமிழே உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சி மொழியாக இருத்தல்வேண்டும்.

(2) தமிழ் பயிற்சி மொழியான பின்னர் பேச்சிலும், எழுத்திலும் கருத்து வெளியிடும் திறமை, மாணவர்களிடம் வளர்ச்சி பெற்றுள்ளது.

(3) பள்ளிப் படிப்பில் ஆங்கிலத்திலிருந்து, தமிழுக்கு ஏற்பட்டுள்ள மாற்றம் வெற்றி பெற்றுவிட்டது.

(4) கல்லூரிகளில் உடனடியாக மனிதவியல் பாடங்களுக்குத் தமிழைப் பயிற்சிமொழி ஆக்கவேண்டும். விஞ்ஞானத்திற்கு

1965 வரை தமிழைப் பயிற்சி மொழியாக்க முடியாது. அதன் பிறகு தமிழைப் பயிற்சி மொழியாக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

8. தடை ஏற்படுத்துவது யார் ?

சென்ற மந்திரி சபையில் கல்வியமைச்சராகவிருந்த திரு. சி. சுப்பிரமணியம் இவ்வறிக்கையை ஒட்டிக் கீழ்வருமாறு பேசினார்.

"கல்லூரிகளில் தமிழைப் போதனாமொழி யாக்குவதே மத்திய, தமிழ்நாடு சர்க்கார்களின் குறிக்கோள். இதனைச் சீக்கிரம் நடைமுறைக்குக் கொணர சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்."

உடனடியாக லட்சுமணசாமி முதலியார் இவ்வறிக்கையை எதிர்த்தார். தமிழைப் பயிற்சி மொழியாக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கு மறைமுகமாக முட்டுக்கட்டைகள் போட்டார். கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையிலுள்ளன. அதன் துணைத்தலைவராக 18 ஆண்டுகள் லட்சுமணசாமி முதலியார் பதவி வகித்து வருகிறார். அதன் பல சபைகளிலும் அங்கத்தினரா யுள்ளவர்களில் பலர் அவரைத் தெய்வமாக வழிபடுபவர்கள். எனவே அவரால் தமிழ் பயிற்சி மொழியாகப் பரவாமல் இருக்க முடிந்தமட்டும் தடைபோட முடிந்தது.

மந்திரி சுப்பிரமணியம் கோவையில், பி.ஏ., பி.எஸ்ஸி வகுப்பு களில் ஒரு சிறு பிரிவுக்கு தமிழைப் பாடமொழியாக்க ஏற்பாடு செய்தார். பின்னர் பி. எஸ். ஜி. கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் முக்கிய பாடத்திற்கு (Main subject) (பொருளாதாரம்) தமிழைப் பயிற்சி மொழியாக்க கல்லூரி நிருவாகத்துக்கு ஆதர வளித்தார். அவிநாசிலிங்கம் ஹோம் சைன்ஸ் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாக்க ஏற்பாடு செய்தார்.

பாடங்களைத் தமிழில் படிக்கும் மாணவர்களுக்கு சில சலுகை கள் வழங்கப்பட்டன.

தமிழில் பாடப் புத்தகங்கள் தயாரிக்க "கல்லூரித் தமிழ் பாடப் புத்தகக் குழு" ஒன்று திரு. ஜி. தாமோதரன் தலைமையில் அமைக்கப்பட்டது. அதற்குத் தமிழ்நாடு கல்வித்துறை நிதி உதவி செய்தது.

பரீட்சார்த்தமாக நடைபெற்ற இம்முயற்சியை தமிழ் மக்கள் வரவேற்றனர். ஆனால் பி.ஏ., பி.எஸ்ஸி வகுப்புகளுக்கு முன்

"பல்கலைக் கழகங்களின் வேலையில் சில மந்திரி—அலுவலகங்கள் தலையிட்டு வரும் போக்கு அதிகரித்துள்ளது. பல்கலைக்கழகப் படிப்பின் எல்லா நிலைகளிலும், வகுப்புகளிலும் பிரதேச மொழியைப் பயிற்சிமொழி ஆக்க வேண்டியதின் அவசியமானது, விரும்பத்தக்கது என்பதை நாமெல்லோரும் ஆமோதிக்கிறோம். ஆயினும் ஒரு அரசாங்கம், சர்க்கார் உத்திரவின்மூலம் ஒரு குறிப்பிட்ட தேதியில் ஒரு குறிப்பிட்ட மொழியை பயிற்சிமொழியாக்க வேண்டும் என்று (பல்கலைக்கழகச் சட்டங்களுக்கு விரோதமாகவும், இச்செயலினால் ஏற்படும் கஷ்டங்களை கவனிக்காமலும்) உத்திரவிடுமானால் பல்கலைக் கழகத்தின் அந்தஸ்தை அவ்வரசாங்கம் மதிக்கிறதென்று சொல்லமுடியுமா? ஒரு அரசியல் தலைவரது ஆர்வத்தை விட எங்கள் ஆர்வம் குறைவானதா? அவருக்கு உயர்ந்த கொள்கைகள் குறிக்கோள்கள், நாட்டுப்பற்றால் தோன்றிய சிந்தனைகள் இவையாவும் இருக்கலாம். ஆயினும் அவருடையஅரசியல் கட்சியின் விருப்பப்படி தானே அவர் நடப்பார்?"

(Education in India –A. Lakshmanaswamy Mudaliar பக்கம் 69)

இக்கருத்துக்களைக் கொண்ட டாக்டர் லட்சுமணசாமி முதலியார் தான் இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருக்கிறார்.

அவர் பம்பாயில் பேசிய பேச்சு தமிழ்நாட்டில் சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழைக் கல்லூரிகளில் பயிற்சிமொழியாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிக்கு எதிரொலி.

இன்று பக்தவத்சலம் கல்வித்துறை அமைச்சராகிவிட்டார். அவரும் கல்லூரி முதல்வர்களை அழைத்திருக்கிறார். "கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வருவது எட்டி நோக்கக்கூடிய எதிர்காலத்தில் சாத்தியப்படாது" என்று பேசிவிட்டு, பின்பு கல்லூரி முதல்வர்களைக் கூட்டி இதனைக் குறிந்து தீர்மானம் செய்ய அவர்களை அழைத்திருக்கிறார்.

பல்கலைக் கழகத்தின் விவகாரங்களில் சுப்பிரமணியம் தலையிட்டார் என்று பம்பாயில் பேசிய லட்சுமணசாமி முதலியார் இப்பொழுது மந்திரி தலையிடுவதைக் கண்டிக்கிறாரா? இல்லையே ஏன்?

தமிழ், பயிற்சிமொழியாக வேண்டுமென்றால் அது தலையீடு. பயிற்சிமொழியாக வேண்டாம் என்பதற்குக் கூட்டம் கூட்டினால் அது தலையீடு ஆகாது. இதுதான் நமது பல்கலைக்கழகத் துணைத் தலைவரின் ஜனநாயகக் கொள்கை.

திரு. சி. சுப்பிரமணியம், சர்க்கார் அறிக்கையாக வெளி யிட்டது ஒரு அரசியல் கட்சியின் கொள்கைமட்டுமல்ல; அதற்கு முன் பல கமிட்டிகளின் தீர்மானங்களைத்தான் அவர் அமுல் நடத்தக்கோரினர். காந்தியடிகள் கூறியபடி "தமிழ் மொழியை உடனே பயிற்சிமொழியாக்குவோம். எதிர்ப்பவர்களை வேலையி லிருந்து தள்ளுவோம்" என்று மந்திரி கூறவில்லை. நாள்குறித்து திட்டமிட்டு, மாற்றத்தைக் கொண்டுவரவேண்டிய தயாரிப்புகள் செய்த பிறகுதான் இதனை அமுலாக்கவேண்டும், என்றுதான் சொன்னர். இந்த ஆரம்ப முயற்சிகளையே டாக்டர் அவர்கள் எதிர்த்தார். அதுமட்டுமல்ல, பாரதி, காந்தியடிகள், டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகிய அனைவருடைய கருத்துக்களைப் படிப்படி யாக அமுலாக்கவே தயங்கித் தயங்கி சுப்பிரமணியம் நடவடிக்கை எடுத்தார். இதனையே எதிர்த்தார் டாக்டர் லட்சுமணசாமி முதலியார்.

இன்று அவருடைய கொள்கையை புதிய கல்வி மந்திரி ஆதரிக்கிறார்.

இவர், சந்தேகத்துக்கிடமின்றி வெற்றிபெற்றுவிட்டதாகச் சட்டசபைக்குழு (1956) பிரகடனம் செய்துவிட்ட விஷயத்தையே மறுப்பதுபோல் உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பாட மொழியாக்க உத்திரவிட்டுள்ளார். 9-ஆம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை ஆங்கிலத்தைப் பாடமொழியாக்க விரும்பும் பள்ளி களுக்கு அவ்வாறே நடத்த அனுமதியளிப்பதாக சுற்றறிக்கை அனுப்பினர்.

அனுமதி கோரிய எல்லாப் பள்ளிகளுக்கும் அனுமதி வழங்கினர். மேலும் யாராவது கேட்டால் அனுமதி வழங்குவ தாக வாக்களித்துள்ளார்.

இது கொள்கை மாற்றமல்லவா? இதுவரை 25 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த முறையை, சர்க்கார் நியமித்த கமிட்டிகளும், சட்டசபைக் கமிட்டியும் வெற்றியடைந்துவிட்டதெனப் புகழ்ந்து கூறிய முறையை யாரையும்கேட்காமல் சுற்றறிக்கை மூலமாகவே மந்திரி மாற்றிவிட்டார். அதையாதரித்து மாவட்டங்களில் எல் லாம் பிரச்சாரம் செய்தார். பின்பு மாவட்டத் தலைமை ஆசிரியர் மாநாடுகள் கூட்டி இதை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றச் செய்தார்.

இது ஜனநாயகமா? இது தமிழருக்கும் தமிழுக்கும் செய்யப் பட்ட பெரும் பாதகம் அல்லவா?

"பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"

என்றார் பாரதியார்.

பின் இரண்டு அடிகளை நிறைவேற்றுவிட்டாலும் உறுதியாக இம்முயற்சியை எதிர்த்து, பக்தவத்சலத்தை இக்கொள்கையைக் கைவிடும்படி செய்வோமா?

இனி கல்லூரிப் பயிற்சிமொழி பற்றி பக்தவத்சலமும், சர்க்கார் அறிக்கையும் கூறுவதைக் கவனிப்போம்.

"The regional language is not going to replace English as medium in colleges in the near foreseeable fututre"—(சர்க்கார் அறிக்கை)

"பிரதேச மொழி, ஆங்கிலத்திற்குப் பதில் பயிற்சி மொழியாவது நாம் எட்டி நோக்கக்கூடிய எதிர்காலத்தில் இல்லை."
—(சர்க்கார் அறிக்கை)

திரு. பக்தவத்சலம் தமது பேச்சுக்களில் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதை எதிர்க்கவில்லை என்று கூறிவிட்டு, அதே மூச்சில் தமிழ் பயிற்சிமொழியாவது எதிர்காலத்தில் சாத்தியமில்லை என்றும் கூறுகிறார்.

கோவையில் பரீட்சார்த்தமாக நடத்தப்பட்ட பயிற்சிமொழி மாற்றத்திற்கு மாணவர் ஆதரவு இல்லை என்றும் அதில் மாணவர்கள் சேரவில்லை என்றும் எனவே பிற கல்லூரிகளில் அதனை விஸ்தரிக்க வேண்டியதில்லை என்றும் கூறுகிறார். தமிழ் பயிற்சிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டு, போதிய காலம் சோதனை செய்யப்பட்டு திட்டம் தோல்வியடைந்து விட்டதா? என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1953-ல் இண்டர்மீடியட் தேர்வு எழுதும், பள்ளியாசிரியர்களாக இருந்து தேர்வு எழுதுவோருக்குத் தமிழில் விடை எழுத அனுமதியளிக்கப்பட்டது. பாடப்புத்தகங்கள் தமிழில் இல்லாததாலும், வினாத் தாள்கள் தமிழில் அச்சடிக்கப்படாததாலும் இச்சோதனை தோல்வியுறுமென்று பல்கலைக் கழக அதிகாரிகள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் இவ்வளவு தடைகளையும் மீறி தமிழில் தேர்வு எழுதியவர்கள் ஆங்கிலத்தில் தேர்வு எழுதியவர்களைவிட எண்ணிக்கையில் அதிகமாகவும், தரத்தில் அதிகமாகவும் வெற்றிபெற்றனர். இவ்-

வெற்றியை ஒப்புக்கொண்டு தமிழில் பாடப்புத்தகங்கள் வெளியிடுவதற்கும், தமிழில் தேர்வுகள் நடத்துவதற்கும்; பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருக்கவேண்டும். கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் இண்டர்மீடியட் தரத்திலாவது, தமிழைப் பயிற்சி மொழியாக்க ஏற்பாடு செய்திருக்கவேண்டும். பி. ஏ. வகுப்பிலும் சில பாடங்களையாவது தமிழில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கவேண்டும். ஆனால் பி. ஏ. வகுப்பில் ஆங்கிலத்தின் பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியிருப்பதால் இண்டர்மீடியட் தேர்வில் தமிழில் விடையெழுத வாய்ப்பு அளிப்பது அவசியமில்லை என்று சொல்லி அச்சலுகையைக் கைவிட்டது. திட்டம் வெற்றி பெறாததால் கைவிடவில்லை. திட்டம் வெற்றி பெற்றதால் கைவிட்டார்கள்.

10. கோவைக் கல்லூரிகளின் அனுபவம்

தற்போது கோவையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியிலும் பி. எஸ். ஜி. கலைக் கல்லூரியிலும், அவினாசிலிங்கம் பெண்கள் கல்லூரியிலும், சில பாடங்களுக்குத் தமிழைப் பயிற்சி மொழியாக்கியுள்ளார்கள். இதுவும் பல்கலைக் கழகத்தின் முன்முயற்சியால் நடந்ததல்ல. பள்ளி நிர்வாகங்களின் முன் முயற்சியாலும், திரு சி. சுப்ரமணியத்தின் ஆதரவாலும் இது சாத்தியமாயிற்று. தமிழ் பயிற்சி மொழியாக உள்ள பாடங்களுக்குப் பாட புத்தகங்களும் எழுதி வெளியிடப்பட்டன. மாணவர்கள் பி. ஏ. இரண்டாவது ஆண்டு இறுதிப் பல்கலைக் கழகத் தேர்வில் ஆங்கில மொழியில் மிகப் பெரும்பாலோர் தேறினார்கள். அதே நகரில் ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் தமிழ் மொழியில் பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்களைப்போல அத்துணை சதவிகிதம் தேறவில்லை.

இதற்குக் காரணம் என்ன? தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகக்கொண்ட மாணவர்கள் மூன்றும் பாகத்திலுள்ள முக்கிய பாடத்தையும், துணைப் பாடத்தையும், ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்களைவிட எளிதில் பயின்று வருகிறார்கள். ஆகவே அப்பாடங்கள் அவர்களுக்கு மிகவும் எளிதாக இருக்கிறது. அவர்கள் ஆங்கில மொழி இலக்கியப் பாடங்களைக் கற்றுக்கொள்வதில் அதிக நேரமும், கவனமும் செலுத்த முடிகிறது; இதனால் ஆங்கிலப் பாடத்தில் அவர்கள் எளிதில் தேறி விடுகிறார்கள். ஆங்கில மொழியில் பாடங்களைப் பயின்று, அம் மொழியிலேயே விடை எழுத வேண்டிய மாணவர்கள் பெரிதும்

இடர்பட்டுப் பாடங்களைப் பாராமல் படிக்க முயலுகிறார்கள். ஆங்கிலத்தில் எழுதுவதற்குரிய மொழிப்பயிற்சி அவர்களுக்கு இல்லாததால் விஷயங்களை மனதில் பதித்துக்கொள்வதற்குப் பதிலாக ஆங்கில வாக்கியங்களைப் பாராமல் படிப்பதிலேயே அவர்களுடைய காலம் வீணாகிறது. இதனால் ஆங்கில மொழிப் பாடங்களைச் சரிவரப் பயில அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இச் சோதனையின் முடிவுகள் எவற்றைக் காட்டுகின்றன?

1. தமிழ் பயிற்சி மொழியாக இருந்தால் மூன்றும் பகுதிப் பாடங்களை எளிதில் கற்றுக்கொள்ள முடிகிறது.

2. மூன்றாவது பகுதியை எளிதில் கற்றுக்கொள்ள முடிவதால் முதற் பகுதியாகிய ஆங்கிலத்திற்கு அதிக நேரம் ஒதுக்கி அதிலும் வெற்றிபெற முடிகிறது.

மேற் கூறியவற்றால் பயிற்சி மொழிச் சோதனையில் தமிழ் மொழிப் பயிற்சி மொழியாக இருப்பதே நன்மையானது என்ற முடிவாகிறது. அப்படியானால் இம்முடிவை ஒப்புக்கொண்டு எல்லாக் கல்லூரிகளுக்கும் அதனை விஸ்தரிக்கும் முயற்சியை மேற்கொள்ளுவதே அரசினரின் கடமையும், பல்கலைக் கழகத்தின் கடமையும் ஆகும்.

ஆனால் பக்தவத்சலம் சொல்லுவதும் செய்வதும் என்ன?

"மாணவர்கள் தமிழ் மொழி பயிற்சி மொழியாக இருப்பதை விரும்பவில்லை." மாணவர்கள் விரும்பாததும், நற்பயனளிக்காததுமான இத்திட்டத்தை விஸ்தரித்துப் பொதுமக்களின் பணத்தை விரயம் செய்யக்கூடாது என்று பேசிவருகிறார்.

மந்திரி உதவாக்கரை என்று சொல்லும் திட்டத்தை மாணவர்கள் முன்வந்து எப்படி ஆதரிப்பார்கள்? பல்கலைக் கழகத்தின் ஆதரவில், கல்வி மந்திரியின் ஆதரவும் இத் திட்டத்திற்கு இல்லை என்று தெரிந்தபின் தமது பிள்ளைகளைப் பெற்றோர், தமிழ் பயிற்சி மொழியாகவுள்ள கல்லூரிகளில் சேர்ப்பார்கள், மந்திரி தமது கருத்தைக் கல்லூரிகள் திறக்கும் காலத்தில் வெளியிட்டார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். கல்லூரிகளில் சேரவேண்டிய மாணவர்கள் அதற்குப்பின் தமிழ்ப் பயிற்சி மொழியாக உள்ள வகுப்புகளில் எப்படிச் சேர முன்வருவார்கள்?

11. தமிழ் பயிற்சிமொழியாகும் வரை கிளர்ச்சி செய்க!

தமிழ் பயிற்சி மொழியாவதைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும், அவரது செல்வாக்கிலுள்ள பல்கலைக் கழக நிறுவனங்

களும், கல்வியமைச்சர் பக்தவத்சலமும் எதிர்த்து வந்தபோதிலும் தமிழ் மக்கள் அவர்களது எதிர்ப்பை முறியடித்துத் தமிழ், தலைமை பெற்றோங்கச் செய்வார்கள் என்பது உறுதி இதற்குரிய அறிகுறிகள் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் அதனது கிளைகளில் நடக்கும் பாரதி விழாக் கூட்டங்களில் பயிற்சி மொழியைப் பிரதான அம்சமாக்கியுள்ளது. எட்டயபுரத்திலும், மதுரையிலும், சென்னையிலும், கோவையிலும், சேலத்திலும், திருச்சியிலும் நாகர் கோவிலிலும் இன்னும் பல ஊர்களிலும், பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு தமிழ் பயிற்சி மொழியாகவேண்டுமென முழங்கியுள்ளனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு குழுவின் ஆணையை மேற்கொண்டு தமிழக மெங்கும் ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றித் தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளன.

ஆயிரக் கணக்கான கடிதங்கள் தமிழகக் கல்வி யமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மதுரை இளைஞர் காங்கிரஸ் தமிழைப் பயிற்சிமொழியாக்கக் கூறியுள்ளது.

தமிழ் நாட்டு நகர மன்றங்கள் எண்ணற்ற ஊராட்சி மன்றங்கள் பல தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. மேலும் பல நகர் மன்றங்கள் தங்கள் அடுத்த கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்ற முன் வந்திருக்கின்றன.

புகழ்வாய்ந்த பல தமிழறிஞர்களும், எழுத்தாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் கொண்ட தமிழக புலவர் குழு உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக்கும் முயற்சியைக் கண்டித்தும், கல்லூரிகளின் எல்லா மட்டங்களிலும் தமிழையே பயிற்சி மொழியாக்க அரசினரை வற்புறுத்தியும், சென்னை பல்கலைக் கழகத்தையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், இம் முயற்சிக்கு வேண்டிய ஒத்துழைப்பை நல்குமாறு கூறியும் தீர்மானங்கள் நிறைவேற்றி யுள்ளன. அத் தீர்மானத்தைத் தமிழகப் புலவர் குழுவினருக்கு நெல்லை, பாளையங்கோட்டை மேலப் பாளயம் நகர மக்களின் சார்பில் அளித்த வரவேற்பிற்கு மறுமொழி கூறும்போது கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அடுத்துப் பேசிய டாக்டர் வ. சுப. மாணிக்கம் (அழகப்பா கலைக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர்) தமிழ் மொழி நமது கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டவனுக்குச் சமமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சர்க்கார் வழங்கும் சலுகைகளாவது தமிழுக்கு வழங்கப்பட்டால்

தமிழில் பாடங்களைப் படித்துப் பட்டம் பெற்றவருக்கு வேலையில் சலுகை அளித்தால் நிச்சயம் எல்லாக் கல்லூரிகளிலும். தமிழ் பாட மொழியாக ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தமிழ் மொழியைப் பாட மொழியாக்கிவிட்டால் துணை மொழிகளாக நாலைந்து மொழிகளைக் கற்றுக்கொள்வது எளிது என்றும் கூறினார். இப்புலவர்களின் குழுவில் தமிழகத்திற்குப் பல அரிய தமிழ் நூல்கள் தந்துதவிய பெரியார்கள் இருக்கிறார்கள். இவர்கள் எந்த அரசியல் கட்சிச் சார்புடையவர்களும் அல்லர். அவர்களில் சிலருடைய பெயர்களை நாம் தெரிந்துகொள்ளுவது அவசியமாகும் தமிழிலக்கிய வரலாற்று ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கும் மயிலை, சினி வேங்கடசாமி சென்னைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசன், தமிழ்த்துறை உதவித் :தலைவர் மு. மாணிக்கம், கவிஞர் பாரதிதாசன் அழகப்பா கல்லூரி காரைக்குடி, இந்துக் கல்லூரி, திருநெல்வேலி, அமெரிக்கன் கல்லூரி மதுரை, பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரி சென்னை, புதுக் கல்லூரி சென்னை முதலிய பல கல்லூரிகளின் தமிழ்த் துறைத் தலைவர்களும் இக்குழுவின் உறுப்பினர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறையில் பணியாற்று , வாண்டையார் அவர்களும், அருணாசலம் பிள்ளை அவர்களும் அதன் அங்கத்தினர்கள். கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் இதன் அமைப்பாளர். இக்குழு தாய்மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் பணியாற்றும் எல்லோருக்கும், பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைப்பாக விளங்குகிறது. இக் குழுவின் தீர்மானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இங்கிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்கில மொழியே 'திராவிட நாட்டின்' அரசியல் மொழியாக இருக்க வேண்டும் என்று நாகர்கோவிலில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழ்நாட்டின் பயிற்சி மொழியாக எம்மொழி இருக்கவேண்டும் என்பதில் அவர்கள் எக்கருத்தும் தெரிவிக்கவில்லை. தமிழ்நாட்டின் உயிர் பிரச்சினையான பயிற்சி மொழிப் பிரச்சினையில் அவர்கள் நடுநிலைமை வகிக்கிறார்களா? என்பது தெரியவில்லை. ஆனால் தமிழ் மொழியைப் பயிற்சிமொழி யாக்கவேண்டும் என்ற தீர்மானங்கள் நகர்மன்றங்களில் வரும்பொழுது தி. மு. க. அங்கத்தினர்கள் அதனை எதிர்க்கவில்லை. இவ்வாறு இரட்டை வேஷம் போடாமல் இப்பிரச்சினையில் அவர்களுடைய கருத்தை அவர்கள் தெளிவாகச் சொல்லுவார்களா? என்று தமிழகம் கேட்கிறது.

வெளிப்படையாகவேனும், மறைமுகவேனும் எவரெதிர்த்த போதிலும் தமிழைப் பயிற்சி மொழியாக்கித் தீருவோம் என்றும்,

தமிழக மக்கள் கிளர்த்தெழுந்துவிட்டார்கள். இவ்வெழுச்சி நிச்சயம் வெற்றிபெறும்.

தமிழ், கல்லூரிகளில் சீக்கிரம் பயிற்சிமொழியாகும். தமிழகத்தில் தமிழ் தலைமை பெறும். இக்காலத்தை நாமனைவரும் அண்மையில் வரச் செய்வோம். தமிழர் விந்தை மனிதர் என்ற அவச் சொல்லைப் போக்குவோம். தமிழ் வாழ்க, தமிழில் கலைகள் ஓங்குக! தமிழில் விஞ்ஞானம் பரவுக! தமிழில் கலைச் செல்வங்களெல்லாம் உருவாகி தமிழ் மக்களிடையே பரவுக! என்று நாமனைவரும் ஒன்றுபட்டு முழங்குவோமாக!

113290